பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 04 2026 WEDNESDAY 6 30 PM

<u>வணக்கம் - மாநிலச் செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

- தமிழக சட்டப்பேரவை தேர்தலில், வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கேட்டுக் கொண்டுள்ளார்.

- வாக்காளர்களின் வசதிக்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

- வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 12 மாற்று ஆவணங்களை பயன்படுத்தி வாக்களிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

- மாநிலத்தின் சில பகுதிகளில் இன்றும் நாளையும் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக் கேட்டுக் கொண்டுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - அர்ச்சனா 18 செகண்ட்ஸ்)

வாக்காளர் சிரமமின்றி வாக்களிப்பதற்கு ஏதுவாக, தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூடுதல் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. சிவஞானம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சிவஞானம் 47 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, வாக்குப்பதிவு அமைதியாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வாக்குச்சாவடிகள் தோறும் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்வதற்காக 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நுண்பார்வையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தல் பணிகளை 136 பொது பார்வையாளர்களும், 40 காவல் பார்வையாளர்களும், 150 செலவின பார்வையாளர்களும் மேற்கொண்டு வருகின்றனர்.

மத்திய ஆயுதப்படையின் 300 கம்பெனிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வாக்குச்சாடிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் உள்ளிட்ட தேர்தல் உபகரணங்கள் பலத்த பாதுகாப்புடன் இன்று அனுப்பப்பட்டன.

தேர்தல் பணிகளை கண்காணிப்பதற்கென தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் 4 கட்டுப்பாட்டு மையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையே, வாக்குச்சாவடிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் குறித்து எமது செய்தியாளர்கள் வழங்கும் நேரடி தகவல்களை தற்போது கேட்கலாம்.

*(சவுண்ட் பைட்-பேக்கேஜ் 4 min. 50 sec. செகண்ட்ஸ்)*

*முதலில் எமது தருமபுரி செய்தியாளரிடம் கேட்கலாம்.*

*முதல்முறை வாக்காளர்கள் வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்காக என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கு தண்டபாணி?*

*(வாய்ஸ் பைட் - தண்டபாணி 1 min. 10 sec.)*

*தகவலுக்கு நன்றி தண்டபாணி.*

*அடுத்ததாக, திருவள்ளூர் மாவட்ட செய்தியாளரிடம், அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ள புதுமை நடவடிக்கைகளைப் பற்றி கேட்கலாம்.*

*தனசேகரன், அங்கு அமைக்கப்பட்டுள்ள பசுமை வாக்குச்சாவடிகள் குறித்த விவரங்களை சொல்லுங்க. . .*

*(வாய்ஸ் பைட் - தனசேகரன் 1 min. 20 sec.)*

*உங்க தகவலுக்கு நன்றி தனசேகரன். . .*

*அடுத்ததாக, தேனி மாவட்டத்தில் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச்சாவடி குறித்த விவரங்களை செய்தியாளரிடம் கேட்கலாம்.*

*இதுகுறித்த முழுமையான விவரங்களை சொல்லுங்க ராஜ்குமார். . .*

*(வாய்ஸ் பைட் - ராஜ்குமார் 1 min. 20 sec. செகண்ட்ஸ்)*

*தகவல்களுக்கு நன்றி ராஜ்குமார்.*

>>>>>><<<<<<

மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள் மற்றும் தென்தமிழக மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்றும் நாளையும் மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் உள் மாவட்டங்களில் கோடை வெயிலின் தாக்கம், வரும் ஞாயிற்றுக்கிழமை வரை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரித்தே காணப்படும் என்று வானிலை ஆய்வு மையத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகளில் ஆட்சியர் திருமதி. சினேகா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 287 வாக்குச்சாவடிகளுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பலத்த பாதுகாப்புடன் அனுப்பப்பட்டன.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டத்தில் தேர்தல் பணியில் 6 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

கோவை மாவட்டத்தில் தேர்தல் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக ஆட்சியர் திரு. பவன்குமார் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

தருமபுரி மாவட்டத்தில் உரிய ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 16 லட்சம் ரூபாயை பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா இன்று இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

எகிப்தின் கெய்ரோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிரிவில் Sejal Kamble வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 25 மீட்டர் பிரிவில் Raj Chandra வெள்ளிப்பதக்கத்தையும், அபினவ் தேஷ்வால் வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஒரு தங்கம், 4 வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்று, பதக்கப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

>>>>>><<<<<<

ஜப்பானில் நடைபெற்று வரும் பார்வை மாற்றுத் திறனாளிகளுக்கான ஆசிய கால்பந்து சாம்பியன் போட்டியில், இந்தியா ஆடவர் பிரிவில் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலின் மகளிர் ஜூனியர் பிரிவில் இந்தியாவின் மாயா ராஜேஷ்வரன் 29-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>END<<<<<<